செ.வெ.எண்.46 நாள்.17.10.2017.

திருநெல்வேலி, பாளையங்கோட்டை கோட்டூர் ரோடு, செந்தில்நகர் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் துப்புரவு பணிகள் டெங்கு கொசு ஒழிப்பு மற்றும் விழிப்புணர்வு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் இன்று அதிகாலையில் நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

-------

திருநெல்வேலி, பாளையங்கோட்டை கோட்டூர் ரோடு, செந்தில்நகர் முப்பிடாதி அம்மன் கோவில் தெரு பகுதியில் துப்புரவு பணிகள் டெங்கு கொசு ஒழிப்பு மற்றும் விழிப்புணர்வு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் இன்று (17.10.2017) அதிகாலையில் நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

செந்தில்நகர் முப்பிடாதி அம்மன் கோவில் தெரு பகுதியில் மாநகராட்சி மூலம் நடைபெற்று வரும் மெகா துப்புரவு பணிகள் டெங்கு கொசு ஒழிப்பு மற்றும் விழிப்புணர்வு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டார். தொடர்ந்து, வீடு, வீடாக சென்று குடிநீர் தொட்டிகள், டிரம்கள் உள்ளிட்டவைகள் சுத்தமாக பராமரிக்கப்பட்டுகிறதா என ஆய்வு செய்தார். டெங்கு கொசு ஒழிப்பு பணியாளர்களிடம் கொசு ஒழிப்பு பணிகளை தீவிரமாக பணியாற்ற வேண்டுமென உத்தரவிட்டார். மேலும், புதிதாக கட்டப்பட்டு வரும் கட்டடங்களில் கொசு புழு உற்பதியாகிறதா என்பதையும், கொசு ஒழிப்பு புகை மருந்து அடிப்பதையும் ஆய்வு மேற்கொண்டார். மேலும், அப்பகுதி பொதுமக்களிடம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் டெங்கு விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை வழங்கினார்.

பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது—

தமிழக அரசின் உத்தரவிற்கிணங்க திருநெல்வேலி மாவட்டத்தில் அனைத்துப் பகுதிகளிலும் மாவட்ட வருவாய் அலுவலர், கோட்டாட்சியர்கள் மற்றும் சம்மந்தப்பட்ட அலுவலர்கள் டெங்கு கொசு ஒழிப்பு மற்றும் தூய்மை பணிகளை நாள்தோறும் அதிகாலை முதல் ஆய்வு செய்து வருகின்றனர். மேலும், இப்பணிகளில் 2000 பணியாளர்கள் கொசு ஒழிப்பு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டு பல்வேறு பகுதிகளில் தீவிரமாக கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இன்னும் 10 தினங்களுக்குள் திருநெல்வேலி மாவட்டத்தில் டெங்கு கொசு கட்டுப்படுத்தப்படும் என தெரிவித்தார்.

ஆய்வின் போது, மாநகர நகர்நல அலுவலர் மரு.பொற்செல்வன், உதவி ஆணையர் திரு.வசந்தராஜ், சுகாதாரப் பணிகள் துணை இயக்குநர் மரு.செந்தில்குமார், வட்டாட்சியர் திரு.தங்கராஜ் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.